**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 134/மா/2021**

**நாள் : 22 .03.2022**

திருமதி. B. உமாதேவி,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – எதிர்மனுதாரர்

சென்னை, ஓட்டேரி, புதியகுளக்கரை சாலை 2–வது தெரு, எண்.24/30 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. B. உமாதேவி அவர்களின் 20.12.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2021-ல் பெறப்பட்டு, 134/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, ஓட்டேரி, புதியகுளக்கரை சாலை 2–வது தெரு, எண்.24/30 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. B. உமாதேவி என்பவர் தனது 20.12.2021 நாளிட்ட புகார் மனுவில் "எனது மூத்த அண்ணன் திரு B. சிவஞானம்–சாந்தி (அண்ணி) இருவருக்கும் 10.02.1977–ல் திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு குழந்தை பிறப்பதற்கு மருத்துவரீதியாக சிக்கல் உள்ளது என தெரிவித்து விட்டார்கள். அதனால் என்னுடைய மூத்த அண்ணன்–அண்ணி இருவரும் என்னையும், என்னுடைய மூத்த சகோதரர்கள்–2, சகோதரிகள்–4 ஆகியோரை தங்கள் பிள்ளைகளாக வளர்த்தும், திருமணமும் செய்து வைத்தார்கள். என்னுடைய 2–வது அண்ணன் B.ராம்குமார்–சரஸ்வதி அவர்களின் 3 பெண் குழந்தைகளையும் எங்களைப் போலவே வளர்த்தார்கள். 2 பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. 3வதாக உள்ள வினோதினியை மட்டும் எனது 2–வது அண்ணன், மூத்த அண்ணனின் சொத்திற்கு ஆசைப்பட்டு வினோதினி, சிவஞானம்–சாந்தி இவர்களுக்கு பிறந்தது போல ஒரு பிறப்பு சான்று எண்.13674/96, பதிவு எண்.32, பதிவு நாள் 09.02.1993–ல் பெற்று

வைத்துள்ளார். அந்த பிறப்பு சான்று போலி என்று சுகாதார அலுவலர் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு வினோதினிக்கு 2.11.2015–ல் சத்தீஸ்குமார் என்பவருடன் திருமணம் செய்து வைக்கப்பட்டது. அதன்பிறகு தான் B.ராம்குமார், வினோதினி B.சிவஞானம்–சாந்தி அவர்களுக்கு பிறந்தது போல பிறப்பு சான்றிதழ் எண்.2016/06/064/000044/0, பதிவு நாள் 09.02.2016 பிறப்பு சான்றிதழை பெற்றுள்ளார்.

ஆனால் வினோதினி, திரு. B.ராம்குமார் மற்றும் சரஸ்வதிக்கு பிறந்த 3–வது பெண்குழந்தை என்பதற்கு பிறப்பு சான்றிதழ் எண்.COC/1993/04/060/000058/0, 2.2.1993 அன்று பதிவு செய்யப்பட்டு மருத்துவ பதிவேட்டிலும் உள்ளது. இவ்வாறாக வினோதினிக்கு மூன்று பிறப்பு சான்றிதழ்கள், இரண்டு குடும்ப அட்டை ஒரே ஆண்டில் வெவ்வேறு சான்றுகள் வைத்து கொண்டு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு கொண்டு இருக்கிறார்கள். எனவே மேற்கண்ட வினோதினி, B.ராம்குமார்–சரஸ்வதியின் மகள் என்றும், B.சிவஞானம்–சாந்தி அவர்கள் மகள் இல்லை என்றும், அவர்களின் பெயர் பதிவு செய்த பிறப்பு சான்றிதழ் எண். 2016/06/064/000044/0 பதிவு நாள். 09.02.2016 சான்றிதழை ரத்து செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை கோரி ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இம்முறைமன்ற 22.12.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மண்டல நல அலுவலர், மண்டலம்–6, பெருநகர சென்னை மாநகராட்சி தனது 02.02.2022 நாளிட்ட கடிதத்தில், "திருமதி. உமாதேவி அவர்களால் அளிக்கப்பட்ட புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிறப்பு சான்றிதழ் எண்.13674/96 மற்றும் பதிவு எண். 32, வார்டு 19 முதலிய விவரங்களும் சான்றிதழும், சான்றிதழில் உள்ள முத்திரைகளும் இவ்வலுவலகம் சார்ந்தது இல்லை என்றும், எனவே மேற்கண்ட சான்றிதழின் உண்மைத்தன்மையை கண்டறிய இயலவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் பிறப்பு சான்றிதழ் பதிவு எண். COC/1993/04/050/00005810 நாள். 02.02.1993ல் குழந்தையின் தாய் மற்றும் குழந்தையின் பெயர் இல்லை. மேலும் இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2008 முதல் அனைத்து பிறப்பு மற்றும் இறப்புச்சான்றிதழ்களும் மாநகராட்சி இணையதளத்தில் கணினி பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பிறப்பு சான்றிதழ்களை பொதுமக்கள் தாங்களே மாநகராட்சி இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தங்களுடைய சான்றிதழ்களில் குழந்தையின் பெயர் சேர்க்க உறுதிமொழி சான்றிதழ் வாங்கினால் மட்டுமே பெயர் சேர்க்கப்படும். மேலும் COC/1993/04/060/00058/0 நாள்.02.02.1993 என்ற சான்றிதழின் மூலப்பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளன என்றும் மேலும் இந்த பிறப்பு நிகழ்வானது நீதிமன்ற பேராணையின்படி பிறப்புபதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 28.01.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 10.02.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் திருமதி. B. உமாதேவி 10.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் " எனது மூத்த அண்ணன் திரு.சிவஞானம்–சாந்தி தம்பதியினருக்கு குழந்தை இல்லை. எனது இரண்டாவது அண்ணன் பி.ராம்குமார்–சரஸ்வதி ஆகியோருக்கு 3 பிள்ளைகள். அவர்களில் மூன்றாவது பெண்குழந்தை வினோதினி என்பவர்

2.2.1993ல் பிறந்தார். மேற்கண்ட வினோதினிக்கு 2 பிறப்புச் சான்றுகள், 2 உணவு வழங்கல் அட்டை ஆகியவை உள்ளது. இரண்டு சான்றிதழ்களும் வெவ்வேறு நாட்களில் பெறப்பட்டுள்ளது. ஒரு பிறப்புச்சான்றிதழில் தாய் தந்தை பெயர் சாந்தி–சிவஞானம் என்று உள்ளது. (B and D No. 13674/96 dated. 4.1.1996) 2வது சான்றிதழில் தாயின் பெயர் இடம் பெறாமல் தந்தையாகிய ராம்குமார் என்கின்ற பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளது. எனது இரண்டாவது அண்ணன் அண்ணி திரு.ராம்குமார்–சரஸ்வதி ஆகியோர் தான் உண்மையிலேயே வினோதினியின் தாய் தந்தை ஆவர். ஆனால் மேற்கண்ட 2 பிறப்பு சான்றிதழ்களில் ஒன்றில் வினோதினியின் பெரியப்பா–பெரியம்மா பெயரை அதாவது சிவஞானம்–சாந்தி ஆகியோரின் பெயர்களை, அப்பா, அம்மா என பொய்யாகக் குறிப்பிட்டு சான்றிதழ் பெற்றுள்ளனர். உண்மையான தாய் தந்தையரின் பெயரை மறைத்து விட்டனர். எனவே, மேற்கண்ட பிறப்பு சான்றிதழ்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, 09.02.2016 நாளிட்ட போலி சான்றிதழை ரத்து செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட சான்றிதழ்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் எனது 20.12.2021 நாளிட்ட மனுவையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5) சென்னை மாநகராட்சி மண்டலம்–06 –ஐ சேர்ந்த சுகாதார ஆய்வாளர் திரு. G. பிரசாத் குமார் என்பவர் 10.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "மனுதாரர் திருமதி. உமாதேவி தனது புகார் மனுவில் சென்னை ஓட்டேரியைச் சேர்ந்த வினோதினி என்பவருக்கு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ள 2 பிறப்புச் சான்றிதழ்களில், பிறப்புச் சான்றிதழ் எண். 13674/96–ல் உள்ள பதிவு எண், வார்டு எண், சான்றிதழ், முத்திரை ஆகியவை மண்டல அலுவலகம்–06 சார்ந்ததல்ல எனவும், மேற்கண்ட சான்றிதழ் குறித்த பழைய பதிவுகள் சென்னை மாநகராட்சியில் கிடைக்கப்பெறாததால், அதன் உண்மைத்தன்மையை கண்டறிய இயலவில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து வினோதினியின் தந்தை திரு. ராம்குமார் என குறிப்பிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி இணையத்தில் உள்ள பிறப்பு சான்றிதழ் குறித்த உண்மைத் தன்மை இன்னும் ஒரு வாரகாலத்தில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்; மேலும் மண்டல நல அலுவலரின் 2.2.2022 நாளிட்ட கடிதத்தையும், எனது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) இந்நிலையில் மண்டல நல அலுவலர், மண்டலம் 6 தனது 16.2.2022 நாளிட்ட கடிதத்தில் பழைய மண்டலம் எண்.4 டிவிஷன் 50ன் 1993–ஆம் ஆண்டைய மூல பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளதால் (damaged condition) பிறப்பு சான்றிதழ் பதிவு எண்.COC/1993/04/050/000058ன் உண்மைத் தன்மையை கண்டறிய இயலவில்லை என்றும், ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் இப்பிறப்புச் சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டதில் அது மெய்யானதென கண்டறியப்பட்டதென்றும் மேலும் இதனை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அதனுடன் அனுப்பப்பட்ட ஆவணங்கள், சான்றிதழ்கள் மற்றும் அவரது வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல நல அலுவலர், மண்டலம்–06 அவர்களது 02.02.2022 நாளிட்ட விளக்க அறிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–06 சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கையுடன் அனுப்பப்பட்ட ஆவணங்கள் ஆகிய

அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் தனது அண்ணன் திரு. சிவஞானம் மற்றும் சாந்தி தம்பதியினரின் குழந்தை வினோதினி இல்லை என்றும், இரண்டாவது அண்ணன் திரு. பி. ராம்குமார் மற்றும் சரஸ்வதி ஆகியோருக்கு பிறந்த மூன்று பெண் குழந்தைகளில், மூன்றாவதாக பிறந்த வினோதினியை அண்ணன் சொத்துக்கு ஆசைப்பட்டு அக்குழந்தை திரு. சிவஞானம்–சாந்தி தம்பதியினரின் குழந்தையென பிறப்புச் சான்று பெற்றுள்ளதாக குறிப்பிட்டு, திருமதி. சாந்தி க/பெ. திரு. சிவஞானம் கோர்ட்டில் மனு செய்து அதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழை ரத்து செய்யுமாறு கோரிக்கை வைத்துள்ளார்.

- மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வினோதினிக்கு,

  (I) Registration No.32, Date of Registration 9.2.93 Date of Birth – 2.2.93 Name of Father B.Sivagnanam, Name of Mother S. Shanthi with Address No.132, Kambar Nagar, Kolathur, Chennai – 600 099.

  (II) Registration No.COC.1993/04/050/000058/0 Date of Registration 02/02/1993 Date of Birth 2.2.1993, Name of Father B. Ram Kumar என்று மட்டும் பதிவு செய்யப்பட்டு, தாயின் பெயர் ஏதும் குறிப்பிடப்படாத மற்றும் பிறப்பு நிகழ்ந்த முகவரி ஏதுமற்ற சான்றிதழ் மற்றும்

  (III) Registration No.2016/06/064/000044/0 Date of Registration 09/02/2016 Date of Birth 02/02/1993 (Name of Father B. Sivagnanam and Name of Mother S. Shanthi Place of Birth: No.132 Avvai Street, Kambar Nagar, Kolathur, Chennai-99) என்ற பிறப்புச் சான்றிதழ் ஆகிய மூன்று பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது விசாரணையில் தெரியவருகிறது.

- மேலும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினால் அளிக்கப்பட்ட குடும்ப அட்டை எண்.01/G/0704202 திரு. B. ராம்குமார், 21 V.K.C தோட்டம் 2வது தெரு, பெரம்பூர், சென்னை என்ற முகவரியுடன் திரு. ராம்குமார், R. சரஸ்வதி, R. ப்ரியா, R. தீபா மற்றும் R. வினோதினி ஆகிய ஐந்து நபர்களையுடைய குடும்ப அட்டை நகல் மற்றும் திரு. சிவஞானம், பழைய எண்.6/A பு.எண்.13 B.B சாலை, பெரம்பூர், சென்னை என்ற முகவரியில் திரு. சிவஞானம், சாந்தி மற்றும் வினோதினி ஆகிய மூவரை உள்ளடக்கிய குடும்ப அட்டை எண்.01/G/0679305 என இரண்டு குடும்ப அட்டைகள் உணவுப் பொருள் வழங்கல் துறையால் வழங்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

- இது தொடர்பான விசாரணையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல நல அலுவலர், மண்டலம்–6 அளித்துள்ள 02.02.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் நகல் எண்.13674/96 பதிவு எண்.32 வார்டு எண்.19 முதலிய விவரங்களும் சான்றிதழும் சான்றிதழில் உள்ள முத்திரைகளும் இவ்வலுவலகம்

சார்ந்தது இல்லை; எனவே மேற்கண்ட சான்றிதழின் உண்மைத் தன்மையை கண்டறிய இயலவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், Registration No.COC.1993/04/050/000058/0 Date of Registration 02/02/1993 Date of Birth 2/2/1993ல் வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் மூலப் பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

- நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் Registration No.2016/06/064/000044/0 Date of Registration 09/02/2016 with Date of Birth 2.2.1993. S.Vinothini (Name of Father B. Sivagnanam and Name of Mother S. Shanthi Place of Birth: No.132 Avvai Street, Kambar Nagar, Kolathur, Chennai-99 என்ற பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்னரே பெருநகர சென்னை மாநகராட்சியால்

(1) Registration No.32, Date of Registration 9.2.93 Date of Birth – 2.2.93 Name of Father B.Sivagnanam, Name of Mother S. Shanthi with Address No.132, Kambar Nagar, Kolathur, Chennai – 600 099.

(2) Registration No.COC.1993/04/050/000058/0 Date of Registration 02/02/1993 Date of Birth 2.2.1993, (Name of Father B. Ram Kumar என்று மட்டும் பதிவு செய்யப்பட்டு, தாயின் பெயர் ஏதும் குறிப்பிடப்படாத மற்றும் பிறப்பு நிகழ்ந்த முகவரி ஏதுமற்ற சான்றிதழ்)

ஆகிய இரண்டு பிறப்புச் சான்றிதழ்கள் வினோதியின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திருமதி. S. சாந்தி க/பெ. சிவஞானம் அவர்களுக்கு வினோதினியின் பிறப்பு பதிவு கிடைக்கப்பெறவில்லை (Non-availability certificate) என்ற 30.12.2015 நாளிட்ட சான்றிதழ் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. உரிய முறையில் மாநகராட்சி அலுவலர்களால் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டிருந்தால் இதற்கு முன்பு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டிருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் விதி 17 தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள், 2000ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> "17. Registers and other records under section 30 (2) (k). – (1) The birth register, death register and still birth register shall be records of permanent importance and shall not be destroyed.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல நல அலுவலர் Registration No.COC.1993/04/050/000058/0 Date of Registration 02/02/1993 Date of Birth 2/2/1993ல் வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் மூலப் பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளன என்று தெரிவித்திருப்பது, மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையும், கடமை தவறிய செயலையும் காட்டுவதாகவே அமைகிறது.

➢ இருப்பினும், இந்நேர்வில் திருமதி. S. சாந்தி க/பெ. சிவஞானம் (Late) அவர்கள் உட்பிரிவு(3), பிரிவு 13 பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம், 1969 உடன்படிக்கப்பட்ட விதி 9 (3) தமிழ்நாடு பிறப்பு / இறப்பு பதிவு விதிகள், 2000-ன்படி தனது மகளின் பிறந்த தேதியை பதிவு செய்யக்கோரி, 19–வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் அசல் பல்வகை மனு எண்.13 of 2016-ன்படி கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்து மனு செய்திருந்தார்.

- 30.12.2015 நாளிட்ட ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட பிறப்பு பதிவு கிடைக்கப்பெறவில்லை என்ற சான்றிதழ். (Non-availability Certificate).
- வினோதினியின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் (10th Mark Sheet)
- 27.12.1991 நாளிட்ட கடவுச் சீட்டு நகல்.
- திரு. சிவஞானம் அவர்களது இறப்பு சான்றிதழ் (Death Certificate).
- ஆதார் அட்டை நகல்.
- பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிதழின் நகல் (Public Notice).

நீதிமன்றம் இம்மனு தொடர்பாக செய்தி தாளில் ஆட்சேபனை ஏதும் இருந்தால் தெரிவிக்க கோரி பொது அறிவிப்பு வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பிறகு திருமதி. சாந்தி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் 5.2.2016 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

5.2.2016 அன்று 19–வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட உத்தரவை பெருநகர சென்னை மாநகராட்சியில் திருமதி சாந்தி அவர்கள் சமர்ப்பித்து தனது மகள் வினோதினியின் பிறந்த தேதியை பதிவு செய்துள்ளார். இந்நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழின் நம்பகத் தன்மை குறித்து இம்முறைமன்றத்தால் விசாரணை மேற்கொள்ளும் நிலை எழவில்லை.

இருப்பினும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல நல அலுவலர், மண்டலம்–6 மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் எண்.13674/96 மற்றும் பதிவு எண்.32, வார்டு 19 முதலிய விவரங்களும் சான்றிதழும் சான்றிதழில் உள்ள முத்திரைகளும் இவ்வலுவலகம் சார்ந்தது இல்லை என்றும் மேற்கண்ட சான்றிதழின் உண்மைத் தன்மையை கண்டறிய இயலவில்லை என்று தெரிவித்திருப்பதும் மேலும் COC.1993/04/050/000058/0 Date of Registration 02/02/1993 வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் மூலப் பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளன என்று தெரிவித்திருப்பதும், மண்டல சுகாதார அலுவலர், மண்டலம் 6 தனது 16.2.2022 நாளிட்ட கடிதத்தில் பழைய மண்டலம் எண்.4 டிவிஷன் 50ன் 1993–ஆம் ஆண்டைய மூல பதிவேடுகள் சிதிலமடைந்துள்ளதால் (damaged condition) பிறப்பு சான்றிதழ் பதிவு எண்.COC/1993/04/050/000058ன் உண்மைத் தன்மையை கண்டறிய இயலவில்லை என்றும், ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் இப்பிறப்புச் சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டதில் அது மெய்யானதென கண்டறியப்பட்டதென்றும் மேலும் இதனை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்று தெரிவித்திருப்பது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. இது மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையே காட்டுகிறது. எனவே, இவ்வாறு பொறுப்பற்ற

முறையில் செயல்பட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், மனுதாரர் வேறு ஏதேனும் நிவாரணம் பெறவிரும்பினால் நீதிமன்றத்தை அனுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி B. உமாதேவி,
   க/பெ. R. கஜேந்திரன்,
   எண்.24/30, புதிய குளக்கரை சாலை 2வது தெரு,
   ஓட்டேரி, சென்னை – 600 012.
2. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் –06,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.158, ஸ்ட்ராஹன்ஸ் ரோடு,
   பட்டாளம், சென்னை – 600 012.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.

**நகல்**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/3/22
செயலாளர்